ஊடக அறிவித்தல் - இல. 35

# தேர்தல் ஆணைக்குழு

## பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05

## உடற்றகுதியீனம் உற்றுள்ளவர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல்

1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 83(4)(ஈ)ஆம் பிரிவின் பிரகாரம் ஏதேனும் உடற்றகுதியீனம் காரணமாக ஏவரேனுமொருவர் நடந்தோ அன்றி இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினால் அல்லது ஏதேனும் பிரதேச போக்குவரத்துச் சபையினால் அல்லது இலங்கை அரசாங்க புகையிரத திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் மக்கள் போக்குவரத்துச் சேவையொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் பொது போக்குவரத்து சேவையொன்றின் மூலம் வாக்கெடுப்பு நிலையத்திற்கு போய்வர முடியாதவராகவிருந்தால், தான் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக தனது தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு தானோ அல்லது அவ்வாறு முடியாதிருப்பின் தனக்குப் பதிலாக வேட்பாளரொருவர், தேர்தல் முகவர் ஒருவர், அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவர், பிரதேச முகவரொருவர் அல்லாத வேரொருவரோ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிக்க முடியும்.

02. இவ்வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பத்தினை பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு ஏழு நாட்களுக்கு முன்னதாக, அதாவது 2020 யூலை 29 ஆந் தேதி அல்லது அதற்கு முன்னதாக உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்குக் கிடைக்கக்கூடியதாக சமர்ப்பித்தல் சட்டமுறையான தேவையொன்றாகுமென்பதோடு, தெரிவத்தாட்சி அலுவலர் திருப்தியடைவாராயின் அந்நபருக்கு விசேட போக்குவரத்து வசதியினைப் பெற்றுக்கொள்ளவதற்கான அனுமதிப்பத்திரங்களை விநியோக்கிக்க முடியும்.

03. விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் நபர், நடந்து அல்லது பொது வாகனங்களில் போகமுடியாதவாறு உடற்றகுதியீனமுற்றிருப்பதன் தன்மையை உறுதிப்படுத்தி பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடமிருந்து (மேல்நாட்டு அல்லது சுதேச வைத்தியர்) பெறப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரமொன்றின் மூலம் தமது விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவாரெனில் அதற்கான முடிவை எடுக்க தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உதவியாகவிருக்கும். தன்னைப் பரிசோதித்து சான்றிதழொன்றை சமர்ப்பிக்குமாறு அத்தகைய ஒருவர் அரசாங்க வைத்தியரொருவரிடம்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியரொருவரிடம் அல்லது ஆயுர்வேத வைத்தியரொருவரிடம் விண்ணப்பிக்குமிடத்து அவர் அவ்வைத்திய அறிக்கையினைக் கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம். தனியார் (மேல்நாட்டு அல்லது சுதேச) வைத்தியர்களிடமிருந்து பெறப்படும் அறிக்கைகளில் அவ்வைத்தியரின் பெயரையும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

04. உடற்றகுதியீனம் உற்றுள்ளவரினால் விசேட போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கத்தக்கவாறு இத்துடனுள்ள மாதிரிப் படிவத்திற்கிணங்கத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களை உரிய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலருக்கு (மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்) அல்லது மாவட்டத்தின் பிரதி அல்லது உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மஹிந்த தேசப்பிரிய
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல்கள் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2020.07.04

DisablePresRels

மாதிரி

பாராளுமன்றத் தேர்தல் - 2020
1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்
83 (4)(ஈ) ஆம் பிரிவின்கீழ் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்காக
உடற்றகுதியீனமுற்றுள்ள ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம்.

தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சிஅலுவலருக்கு,

(1) உடற்றகுதியீனம் உற்றுள்ளவரின் விபரங்கள்:

(அ) முழுப் பெயர்: ......................................................................

(ஆ) அஞ்சல் முகவரி: ......................................................................
......................................................................

(இ) தேருநர் இடாப்பிலுள்ளவாறு வாக்கெடுப்புப் பிரிவு, வாக்கெடுப்பு மாவட்டம், தொடர் இலக்கம் (தெரியுமாயின்)
......................................................................

(2) உடற்றகுதியீனம் பற்றிய சுருக்கமான விபரம் : ......................................................................
......................................................................
.

(3) உடற்றகுதியீனம் உற்றவருக்காக வேறெவராலும் விண்ணப்பப்படிவம் அனுப்பப்படுமாயின் அவரது பெயரும் முகவரியும் : ......................................................................
......................................................................
......................................................................

(4) இவ்விண்ணப்பத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க வைத்தியர் ஒருவரின்/ பதிவு செய்யப்பட்ட அல்லது உதவி வைத்தியத் தொழில் புரியும் ஒருவரின்/ ஆயர்வேத வைத்தியரொருவரின்/ தனியார் வைத்தியரொருவரின் அறிக்கை ஒன்றை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.

வைத்தியரின் பெயர்: ......................................................................
பதிவிலக்கம்: ......................................................................

(5) மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு உடற்றகுதியீனம் காரணமாக எனக்கு/ உடற்றகுதியீனமுற்றுள்ள மேலே பெயர் காணப்படுபவருக்கு நடந்து அல்லது இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை அல்லது இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களத்தினால் அல்லது ஏதேனும் பொதுப் போக்குவரத்துச் சேவை எதனிலாலும் ஏற்பாடு செய்யப்படும் போக்குவரத்து வசதி மூலம் வாக்களிப்பு நிலையத்திற்கு போக முடியாதென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

(6) மேற்கூறப்பட்ட வாக்கெடுப்பின்போது வாக்கினைப் பிரயோகிக்கும் பொருட்டு வாக்கெடுப்பு நிலையத்திற்குப் போய் வருவதற்கென நான்/ உடற்றகுதியீனம் உற்ற மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ளவர் ஏதேனுமொரு வாகனத்தைப் பயன்படுத்துவதற்கு எழுத்து மூலமான உத்தரவினை வழங்குமாறு இத்தால் கேட்டுக்கொள்கின்றேன்.

திகதி................

..................................
உடற்றகுதியீனமானவரின்/ அவருக்காக
ிண்ணப்பிக்கும் வேறொருவரின்
கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம்.